# துணைத் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் இதுவரை விண்ணப்பிக்காதவர்களுக்கும் சென்டாக்கில் விண்ணப்பிக்க வாய்ப்பு!

சென்டாக்கில் விண்ணப்பித்தவர்களுக்கான முதற்கட்ட சேர்க்கை பட்டியல் வெளியிடப்பட்டு, அதன்படி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுமார் 2,100 பேரும், பாலிடெக்னிக் கல்லூரிகளில் 543 மாணவர்கள், பாலிடெக்னிக் லேட்டரல் என்ட்ரியில் (Lateral Entry) 127 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். தற்போது இரண்டாம் கட்ட சேர்க்கைக்கான பணிகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. மேல்நிலைப் பள்ளித் துணைத்தேர்வு (HSc Supplementary) எழுதித் தேர்ச்சிப் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கும்படி பெற்றோர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சென்டாக் தற்போது வாய்ப்பு வழங்குகிறது. இதனால், துணைத்தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றவர்கள் மதிப்பெண் பட்டியலைத் தங்கள் விண்ணப்பத்தில் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் (Registered mail ID) முகவரியிலிருந்து centacug@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் (e-mail) செய்து தங்கள் தேர்ச்சியை பதிவு செய்துகொள்ளவும். மேலும், இதுவரை பல்வேறு காரணங்களால் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் வரும் 1.8.2018 முதல் 6.8.2018 தேதி மாலை 5 மணிவரை www.centacpuducherry.in இணையதள முகவரியில் விண்ணப்பிக்கவும். இந்த வாய்ப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கும், தொழில் நுட்பக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி (லேட்டரல் என்ட்ரிக்கு) ஆகியவைகளுக்கு மட்டுமே பொருந்தும். மாணவர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

31.07.2018
புதுச்சேரி

- கன்வீனர் சென்டாக்

CENTRALISED ADMISSION COMMITTEE
CENTAC